

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.5.2025) தலைமைச் செயலகத்தில் அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பின் தலைவர் கல்யாண் சௌபே மற்றும் துணைத் தலைவர் என்.எ.ஹரிஸ் ஆகியோர் சந்தித்து தமிழ்நாட்டில் கால்பந்து விளையாட்டினை இளைஞர்களிடம் அதிக அளவில் கொண்டு செல்வது குறித்து கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை நகராட்சி நிருவாக இயக்குநர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று முன்தினம் (27.05.2025) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ்.சிவராசு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் ஆனந்த் மோகன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் இயக்குநர் பொறியாளர் பெ. நடராசன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.8.25 கோடியில்

# மயிலாப்பூரில் புதிய பல்நோக்கு மையம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பணியினை தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 29 -

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி 26.05.2025 அன்று சென்னை, மயிலாப்பூரில் உள்ள லஸ் நிழற்சாலையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.8.25 கோடி மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் அமைக்கும் பணியை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது :-

சென்னை நகரத்தில் பெறப்படக்கூடிய வருவாய் இந்த மாநகரத்தில் உள்ள குறிப்பாக வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் பயன்பட வேண்டும் என்பதற்காக 182 திட்டப் பணிகள் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருகிறது. தென் சென்னை, மத்திய சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் விளையாட்டு அரங்கள், பூங்காக்கள், சமுதாய நலக்கூடங்கள், நூலகங்கள், படைப்பகங்கள் என பல்வேறு பணிகள் துவக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தற்பொழுது நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் இந்த ஆண்டு 2025 இறுதிக்குள் அல்லது 2026 ஜனவரி மாதம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகள் நடைபெற்ற வருகிறது.

**குத்தம்பாக்கம் பேருந்து நிலையம்!**

ஜூலை மாத இறுதிக்குள் குத்தம்பாக்கம் பேருந்து நிலையத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது, விரைவில் நாங்கள் அங்கு சென்று ஆய்வு மேற்கொள்ள உள்ளோம்.

ஆதரிப்பதாக இருந்தாலும் எதிர்ப்பதாக இருந்தாலும் வெளிப்படையாக முதலமைச்சர் அவர்கள் அதனை செய்யக் கூடியவர். 2021 ஆம் ஆண்டு கோவிட் தொற்று காரணமாக நிதி ஆயோக் கூட்டத்தில் முதலமைச்சர் பங்கேற்கவில்லை. அதற்கு அடுத்த ஆண்டு நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் கலைஞர் நினைவு நாளை ஒட்டி கூட்டம் வந்ததால் நிதி அமைச்சரை அந்த கூட்டத்தில் பங்கேற்க செய்கிறோம் எனக் கூறியபோது நிதியமைச்சர் தேவை இல்லை என மறுத்ததால் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. அதற்கு அடுத்த ஆண்டு நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தின் போது அன்னிய முதலீட்டை ஈர்பதற்காக வெளிநாடு சுற்றுப்பயணத்தை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டதால் கூட்டத்தில் பங்கேற்க முடியவில்லை.

**பா.ஜ.க.வோடு உள்ள உறவு!**

கடந்த ஆண்டு ஒன்றியத்தின் நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தின் பெயர் எங்கும் குறிப்பிடப் படவில்லை என்பதை அழுத்தம் திருத்தமாக காரணத்தைச் சொல்லி அந்தக் கூட்டத்தை மறுத்தது உண்மைதான். இந்த ஆண்டு கூட்டத்தில் பங்கேற்றது குறித்து "மஞ்சக் காமாலை உள்ளவருக்கு கண்ணுக்கு காண்பதெல்லாம் மஞ்சள் தென்படுவது போல் இருக்கும்" என்பது போல்தான் உள்ளது. எங்கள் முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு பாரத பிரதமர் அவர்களை சந்தித்த போதும் கூட "தமிழகத்திற்கு மறுக்கப்படுகின்ற தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாததால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கல்வித் தொகையை திரும்ப பெற வேண்டும் என தான் வலியுறுத்தினார்".

மற்ற இயக்கத்தை போல் துள்ளி வந்து பின்புற வாசல் வழியாக பாஜகவோடு கள்ள உறவு வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் தி.மு.க.விற்கு இல்லை எனவும். நேற்று முளைத்த காளான்களுக்கு எல்லாம் இன்று பதில் சொல்ல வேண்டிய தயாராக இல்லை எனவும் தெரிவித்தார்.

**மணல் கோட்டை தகர்க்கப்படும்!**

களத்திற்கு வரட்டும் அவர்கள் எந்த வகையில் அடிக்கீறார்களா அதை விட 100 மடங்கு வேகமாக ஒரே அடியில் பிடரி சிலிர்க்கின்ற வகையில் அடிப்பதற்கு தி.மு.க. களத்தில் தயாராகநிற்கின்றது. ஏதோ ஒரு நாள் அறிக்கையில் ஏதோஒருநாள்ரோட்ஷோ செய்து விட்டு செல்கின்ற முதலமைச்சர் இல்லை எங்கள் முதலமைச்சர் அவர்கள் அனுதினமும் மக்களோடு மக்களாக பயணிக்க கூடியவர். 2026 ஆம் ஆண்டு மகுடம் சூட்ட தமிழக மக்கள் தயாராக இருக்கிறார்கள். இது போன்ற அறிக்கைகளால் திட்டமிட்டு கட்டமைக் கப்படுகின்ற இந்த கட்டுமானம் கடற்கரை கட்டிய மணல் கோட்டைக்கு சமமானது நிச்சயம் தகர்க்கப் படும், தகர்த்து எறியப்படும்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், சி.எம்.டி.ஏ. கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர் திருமதி.விஜயகுமாரி, மாமன்ற உறுப்பினர் திருமதி.மோ. சரஸ்வதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் கோவிந்தவாடி ஊராட்சியில் ரூபாய் 6.87 கோடியில் அரசு மேல்நிலைப்பள்ளி புதிய கட்டிடம் கட்டுவதற்கான பணியை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைசெல்வி மோகன், ஒன்றிய கழக செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 97வது நாள்!

## திரு.வி.க. நகர் தெற்கு பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, மே.28-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 97 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (27.5.2025) திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 76 - செல்லப்பா தெரு ஸ்டாரன்ஸ் ரோடு ஓட்டேரி இந்தியன் வங்கி எதிரில். 2) வட்டம் 76அ - கோவிந்தபுரம் பட்டாளம் ஆஞ்சநேயர் கோயில் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக் காவும்,

எதற்காகவும் விட்டுத் தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதி மொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா. வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ். தமிழ்செல்வி,

எஸ்.சசிகுமார், டி. சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம். தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர். ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### பெரம்பூர் உதயசூரியன் நகரில் தீ விபத்து!

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, மே 29 -

பெரம்பூர் சட்டமன்ற தொகுதி வார்டு-37 உதய சூரியன் நகர் பின்புறம் உள்ள குடிசைகளில் 26-05-2025 மாலை தீப்பிடித்து எரிந்த தகவல் அறிந்தவுடன் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் நேரில் சென்று பார்வையிட்டு உடனடியாக மீட்பு நடவடிக்கை மேற்கொண்டார்.

மேலும், பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்து வருவாய் துறை மூலம் கணக்கெடுக்கும் பணி நடந்து முடிந்ததை தொடர்ந்து 27-05-2025 காலை வருவாய் துறை, உணவு பொருள் வழங்கல் துறை, சென்னை மாநகராட்சி மற்றும் காவல் துறை அதிகாரிகளை வரவழைத்து தீயில் எரிந்த சான்றிதழ்கள் பெறுவதற்கு நடைபெற்ற சிறப்பு முகாமை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களை நேரில் சந்தித்து நிவாரண உதவியாக ரொக்கம் ரூ.5000/- மற்றும் அரிசி 10 கிலோ, போர்வை, துண்டு, பாய், புடவை, லுங்கி, பக்கெட், மக்(MUG) உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் வழங்கினார்.

அதுபோது, பகுதி செயலாளர் அ.முருகன், மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஆர். கமலக்கண்ணன், வட்ட செயலாளர் கே.இ. செந்தமிழரசு, வி.முருகன், சி.எஸ்.ரவி, பகுதி அவைத் தலைவர் ஏ. ஜியா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் வை. கௌதம், பிரசிடென்சி சி.சதீஷ், தேவ அன்பு, மாவட்ட பிரதிநிதி அருண் சக்கிரவர்த்தி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மத்திய மாவட்டம், பவானி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பவானி நகர BLA2 பாகமுகவர்கள் மற்றும் BLC பூத் கமிட்டி கூட்டம் பவானி நகரத்தில் முன்னாள் அமைச்சரும், ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளருமான தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் தலைமையில் பவானி சட்டமன்ற தொகுதி பார்வையாளரும், மாநில நெசவாளரணி செயலாளருமான எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் முன்னிலையில் பவானி நகர செயலாளர் ப.சீ.நாகராஜ் வரவேற்புரையில் பவானி நகரத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சிகளைச் சார்ந்த இளைஞர்கள் தங்களை தி.மு. கழகத்தில் இணைத்துக் கொண்டனர். மேலும் ஈரோடு மத்திய மாவட்டத்திற்கான இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை துவக்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் மாவட்ட பிரதிநிதிகள் நல்லசிவம், ராஜசேகர், நகர துணை செயலாளர்கள் முருகேசன், ரவி, நகர பொருளாளர் ராஜசேகர், நகரமன்ற தலைவர் சிந்தூரி இளங்கோவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. மாணவர் அணி

# சிவகாசி, கரூர் ஆகிய மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் விருதுநகர் வடக்கு மாவட்டம் - சிவகாசி மாநகரம், கரூர் மாவட்டம் - கரூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

**சிவகாசி மாநகரம்**

அமைப்பாளர் - க.மணிகண்டன் நெ.548, பராசக்தி காலனி ஜவஹர்லால் நேரு ரோடு, சிவகாசி

துணை அமைப்பாளர்கள் - 1) கு.மாரீஸ்வரன், நெ. 6/4 சுப்பிரமணிய கோவில் முதல் தெரு திருத்தங்கல், சிவகாசி 2) ம.அன்புராஜா நெ 53,கண்ணகி காலனி, திருத்தங்கல், சிவகாசி 3) ரா.ரமேஷ்பாபு, 102/40, புது ரோட்டுத்தெரு, சிவகாசி 4) கா.மணிகண்டன், 1851/ஏ, பராசக்தி காலனி, சிவகாசி 5) மு.கார்த்தீஷ்வரன், மருதபாண்டியன் மடத்து கிழக்கு தெரு சிவகாசி 6) கா.ஜெயஸ்ரீ, 423, நா.பா.நிதி திருத்தங்கல், சிவகாசி

### கரூர் மாவட்டம்

**கரூர் மாநகரம்**

அமைப்பாளர் - ரா.செல்வம், 17/2ல், கணபதி பாளையம் வடக்கு தாந்தோனிமலை அஞ்சல், கரூர் வட்டம், கரூர் மாவட்டம்


துணை அமைப்பாளர்கள் - 1) ச.சரண்ராஜ், 354, திருக்காம்புலியூர், எல்.என்.எஸ் அஞ்சல், கரூர் வட்டம் கரூர் மாவட்டம் 2) ம.செல்வேந்திரன், 8, அண்ணா இல்லம், கடைவீதி திருமாநிலையூர் அஞ்சல், கரூர் வட்டம், கரூர் மாவட்டம் 3) ர.அங்குலோகேஷ், 16, திருப்பதி லே-அவுட் 2வது கிராஸ் சின்ன ஆண்டாங்கோவில் ரோடு கரூர் வட்டம், கரூர் மாவட்டம் 4) ந.பிரபாகரன், 102/1, சணப்பிரட்டி, பசுபதிபாளையம் அஞ்சல் கரூர் வட்டம், கரூர் மாவட்டம் 5) ச.சரண்யா, 152, காந்தி சாலை நடுத்தெரு முத்துராஜபுரம், கரூர் வட்டம் கரூர் மாவட்டம்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26-05-2025.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கே. மன்னப்பன்**
**மே 29 (2021)**



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

நெருக்கடி காலத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தபோதும் கழகத்தின்மீது உறுதியாக பற்றுடன் திகழ்ந்தார்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.